IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 83/2018
Deposition of witness for DW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முருகேசன் | Caste | : | |
| Father Name | : | கன்னியப்பன் | Calling | : | |
| Village | : | ஆரிமுத்து மோட்டூர் | Religion | : | |
| Town | : | காட்பாடி | Age | : | 83 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of July, 2025.

Chief Examination:

நான் இவ்வழக்கில் 3ம் பிரதிவாதி. நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு ஆவணங்கள்.

1. பிரதிவாதிகளின் பெயரில் உள்ள 1934ம் வருடத்திய கிரையப்பத்திரத்தின் அசல் பி.வா.சா.ஆ.1 ஆகும்.

2. பிரதிவாதிகளின் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் அசல் பி.வா.சா.ஆ.2 ஆகும்.

3. பிரதிவாதிகளின் பெயரில் உள்ள மின் இணைப்பு அட்டையின் அசல் பி.வா.சா.ஆ.3 ஆகும்.

4. பிரதிவாதிகளின் பெயரில் உள்ள வில்லங்க சான்றின் நகல் பி.வா.சா.ஆ.4 ஆகும்.

5. பிரதிவாதிகளின் பெயரில் உள்ள குடும்ப அட்டையின் நகல் பி.வா.சா.ஆ.5 ஆகும்.

குறுக்கு விசாரணை:

1. நான் தாக்கல் செய்திருக்கும் பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்தில் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். EXB1 ஆனது நான் தாக்கல் செய்த ஆவணம் என்று சொன்னால் சரிதான். அந்த ஆவணத்திலாவது சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

2. நீதிமன்றத்தில் இருந்து வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கப்பட்டு மனு சொத்துக்கு வந்து அளவீடு செய்தாரா என்றால் வழக்கறிஞர் ஆணையர் வந்தார். வழக்கறிஞர் ஆணையர் அறிக்கைக்கு என்னுடைய தரப்பில் நான் ஏதேனும் ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1934 ஆண்டு ஆவணமான EXB1 ஆனது இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல.

3. வாதியினுடைய இடத்தை நான் ஆக்கிமித்து உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கையின்படி 332 சதுர அடி நான் ஆக்கிமிப்பு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் ஆக்கிமிப்பு செய்து உள்ளதால்தான் எங்களது தரப்பில் பட்டாவோ அல்லது வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க மறு விசாரணை அனுமதி அளிக்கப்படுகிறது.

EXB1 ல் சொத்து விவரத்தில் கிராம நத்தம் என்றும் மற்றும் ஜக்குபந்தி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

<u>குறுக்கு விசாரணை</u>

**ஆனால் EXB1 ல் சொத்து விவரத்தில் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.**

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI